தினமணி

## இயற்கை விவசாயத்தில் 200 பாரம்பரிய நெல் வகைகள் புதுப்பிப்பு

First Published : 10 Apr 2012 03:57:39 AM IST



பெங்களூர்: கர்நாடகத்தைச் சேர்ந்த பட்டதாரி விவசாயி ஸ்ரீனிவாசமூர்த்தி, இயற்கை விவசாய முறையின் உதவியுடன் பாரம்பரியமான 200 நெல் வகைகளைப் புதுப்பித்து சாதனை படைத்துள்ளார்.

1960-களில் ஏற்பட்ட பசுமைப் புரட்சி, இந்தியாவின் வேளாண் முறையையே தலைகீழாக மாற்றி அமைத்துவிட்டது. ஆனால், பசுமைப் புரட்சியால் நெல் உற்பத்தி பலமடங்கு பெருகிவிட்டதாக மார்த்தட்டிக் கொண்டாலும், ரசாயன உரத்தால் ஏற்பட்ட பின்விளைவுகளும் ஏராளம் என்பதை அண்மைக் காலமாக அறியமுடிகிறது.

விளைவு இயற்கை விவசாயம் மற்றும் அதன்மூலம் விளையும் உணவுப் பொருள்களுக்கு மவுசு கூடிவருகிறது.

இதை, சரியாக அறிந்து கொண்ட மைசூர் மாவட்டம், டி. நரசிபுரா வட்டம், சித்தனஹுண்டி கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீனிவாசமூர்த்தி, இயற்கை விவசாயத்தில் புதுமைகளைப் படைக்கத் தொடங்கியிருக்கிறார். பி.ஏ. பட்டதாரியான இவர், சட்டப் படிப்பை பாதியில் நிறுத்தியதும் வேலை தேடி அலைந்துள்ளார். காவலர், கால்நடை ஆய்வாளர் பணிகளுக்கு முயன்றும் கிடைக்காததால், தனியார் வேலைக்கு அலைந்துள்ளார்.

வேலை தேடுவதே ஒரு வேலையாகி விடக் கூடாது என்பதை உணர்ந்த ஸ்ரீனிவாசமூர்த்தி, 1996-ல் தனது தந்தையின் 2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யத் தொடங்கினா0ர். ரசாயன உரத்தைப் பயன்படுத்தி அதிநவீன விவசாய முறையைப் பின்பற்றி வந்த ஸ்ரீனிவாசமூர்த்தியின் கைக்கு 2005-ல் கிடைத்த சுபாஷ்பலிகார் எழுதிய ஜீரோ கல்டிவேஷன் என்ற நூலைப் படிக்க தொடங்கினார்.

இயற்கையைத் துன்புறுத்தாமல், காசு செலவில்லாமல், கைக்குக் கிடைக்கும் பொருள்களை வைத்துக் கொண்டு, விவசாயத்தில் லாபம் ஈட்டும் கலையை இந் நூல் மூலம் அறிந்து கொண்டார். பின்னர், 2006-ம் ஆண்டில் இயற்கை விவசாயத்தில் நெல் விளைச்சலைத் தொடங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியது:
கர்நாடகம், தமிழகம், மகாராஷ்டிரம், ஒடிசா, உத்தரபிரதேச மாநிலங்களில் பயணம் செய்து, விவசாயிகளைச் சந்தித்து பாரம்பரிய நெல் வகைகளை ஒவ்வொரு பிடியாக வாங்கி வந்தேன். இயற்கை விவசாய முறையில் முதலில் 30 நெல் வகைகளைப் பயிரிட்டு வெற்றி கண்டேன்.

இதேபோல மேலும் பல நெல் விதைகளை ஊரெல்லாம் திரிந்து சேகரித்து 200 வகையான நெல் பயிரை வெற்றிகரமாக புதுப்பித்துள்ளேன். பாரம்பரிய நெல் வகைகள் நமது மண்ணுக்கு ஒத்து வராது, பயிரிடுவது சிரமம், லாபம் கிடைக்காது என்று விவசாயிகளிடையே காணப்பட்ட மூட நம்பிக்கையை இதன்மூலம் உடைத்தெறிந்தேன்.

ராஜமுடி, கெப்ரிசன்னா, கந்தசாலே, ஜீராசன்னா, சஸ்திகாசாலி (60 நாள்களில் விளையக் கூடியது), ஜோகுளா (9 மாதங்களில் விளையக் கூடியது) போன்ற 200 வகை நெல் விதைகள் என்னிடம் உள்ளன. இவற்றை விவசாயிகளுக்கு அளித்து வருகிறேன். விவசாயிகளிடையே, பாரம்பரிய நெல் பயிர் வகைகளை பிரபலப்படுத்துவதே என் நோக்கம். 500 விவசாயிகளுக்கு நெல் விதைகளை விற்பனை செய்து வருகிறேன்.

மருத்துவ குணம் நிறைந்ததால் சின்னப்பொன்னி, ராஜமுடி, ரத்னசுடி, மைசூர் மல்லிகே, ஜீராசன்னா, கெப்ரிசன்னா நெல் வகைகளுக்கு விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு உள்ளது. இதுவரை 15 குவிண்டால் நெல் விதைகளை விவசாயிகளுக்கு அளித்துள்ளேன்.

நவீன விவசாயத்தில், ஏக்கருக்கு 15 முதல் 20 குவிண்டால் மகசூல் கிடைத்தது. இயற்கை விவசாயத்தில் 22 முதல் 25 குவிண்டால் அறுவடை செய்து வருகிறேன். நல்ல லாபமும் கிடைப்பதால் திருப்திகரமாக விவசாயம் செய்து வருகிறேன்.

எத்தனை ஆண்டுகளானாலும், பாரம்பரிய நெல் வகைகளின் குணம், நிறம், மணம், சுவை மாறாது. பாரம்பரிய நெல்வகைகள் கொண்ட நெல் வங்கியை உருவாக்க வேண்டுமென்பதே எனது எதிர்கால லட்சியம். பஞ்சாயத்துகள் மூலம் இயற்கை விவசாயத்தைப் பரவலாக்க வேண்டும் என்றார் அவர். தொடர்புக்கு: 99007 46499.

## 50 சத மானியத்தில் பாசிப் பயறு விதைகள்

First Published : 09 Apr 2012 11:58:40 AM IST

திருச்செங்கோடு, ஏப் 8:. பயறு வகை உற்பத்தியைப் பெருக்க பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் கோடைப் பயறு சாகுபடி திட்டத்தில் விவசாயிகளுக்கு 50 சத மானியத்தில் பாசிப்பயறு விதைகள் வழங்கப்படுகின்றன.

இது குறித்து, பள்ளிப்பாளையம் வேளாண் உதவி இயக்குநர் முரளீதரன் கூறியது:

கோடைப் பயறு சாகுபடி திட்டத்தின் கீழ் 180 ஏக்கரில் பாசிப் பயறு சாகுபடி செய்ய வம்பன் 1 சான்று பெற்ற விதைகள் 1,445 கிலோ விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் நெல், கரும்பு,எள் போன்ற பயிர்கள் அதிக பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இப் பயிர்களுடன் சேர்த்து பயறு வகைப் பயிர்களை குறிப்பாக பாசிப் பயறு சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, பாசிப் பயறு சாகுபடி சிறப்புத் திட்டம் நடப்பு கோடை பருவத்தில் (ஏப்ரல் - மே) பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பாசிப் பயறு விலை ரூ. 51 ஆகும்.

இதில், பாதி விலை செலுத்தினால் விதைகள் தரப்படும். அவர்கள் தங்களது வயலின் சர்வே எண்ணுடன் வந்து விதைகளைப் பெற்றுக் கொள்ளலாம். வம்பன்-1 எழுபது நாட்களில் முதிர்ச்சி அடைந்து அறுவடைக்கு வரக் கூடியது.

ஒரு ஏக்கரில் 400 கிலோ மகசூல் கிடைக்கும். மானாவாரி மற்றும் இறவை பட்டங்களிலும் இதனை விதைக்கலாம். பூஞ்சாள மருந்து விதை நேர்த்தி, பயிர் எண்ணிக்கை பராமரிப்பு, 2 சத டிஏபி தெளிப்பு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு ஆகிய உயரிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றி அதிக லாபம் பெறலாம் என்றார் அவர்.

## தாமதமாகும் கொள்முதல்; சாலையில் நெல் மூட்டைகள்

First Published : 09 Apr 2012 12:41:52 PM IST

லால்குடி,ஏப். 8: திருச்சி மாவட்டம், லால்குடி அருகேயுள்ள புள்ளம்பாடி பேரூராட்சிக்குள்பட்ட பகுதிகளில் நெல் கொள்முதல் செய்வதை அரசு தாமதித்து வருவதாக கூறப்படுகிறது.

புள்ளம்பாடி பேரூராட்சிக்குள்பட்ட பகுதிகளில் சுமார் 2,500 ஏக்கரில் ஆந்திரா பொன்னி, கோ 43, ஐஆர் 20 போன்ற ரக நெல்கள் அண்மையில் அறுவடை செய்யப்பட்டது.

அந்த நெல்களை நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் புள்ளம்பாடியில் உள்ள சிதம்பரனேஸ்வரர் கோயில், சூசையப்பர் கோயில் ஆகிய இடங்களில் அரசு சார்பில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

இருப்பினும், அந்த நெல் கொள்முதல் நிலையங்களில், கொள்முதல் செய்யும் நெல் மூட்டைகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும், நிர்ணயித்த எடையை விட கூடுதலாக வைக்கக் கூடாது, நெல் கொள்முதல் செய்ததற்கான பணத்தை பட்டுவாடா செய்யும் போது ரசீது வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் உள்ளதென விவசாயிகள் கூறுகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் சகாதேவன், திருநாவுக்கரசு ஆகியோர் கூறியது:
இந்த நெல் கொள்முதல் நிலையங்களில் தினமும் ரூ. 4 லட்சம் மட்டுமே பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. இதனால் நெல் கொள்முதல் செய்வதில் தேக்கம் ஏற்படுகிறது. கடந்த ஆட்சியில் ஒரு கொள்முதல் நிலையத்துக்கு ரூ. 8 லட்சம் வழங்கப்பட்டது. தற்போது பாதியாக குறைந்துள்ளது.
40 கிலோ நெல் மூட்டைக்கு பதிலாக 41. 200 கி.கி. எடை வைத்து கொள்முதல் செய்கின்றனர். கொள்முதல் செய்யும் நெல்லுக்கு பணம் பட்டுவாடா செய்யும் போது உரிய ரசீது வழங்கப்படுவதில்லை.
தற்போது நெல் கொள்முதல் செய்யும் நிலை தொடர்ந்தால், இப் பகுதியில் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய இன்னும் 2 மாதம் ஆகும். இதனால் சாலையோரங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகள் கோடை மழையால் சேதமடையும்.
இந்த மாதம் 25-ம் தேதி புள்ளம்பாடி குளுந்தாளம்மன் கோயில் திருவிழாவை சிறப்பாக நடத்த முடியாது. எனவே,கூடுதலாக ஒரு நெல் கொள்முதல் நிலையத்தை திறக்க வேண்டும் என்றனர் அவர்கள்.
இக் குற்றச்சாட்டுகள் குறித்து நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் சக்திவேல் கூறியதாவது: திருச்சி மாவட்டத்திலேயே புள்ளம்பாடி மையத்தில் தான் இந்த பிரச்னை ஒவ்வொரு வருடமும் வருகிறது. நெல் அறுவடை செய்தவுடன் நேரடியாக நெல் மூட்டைகளை சாலையோரங்களில் அடுக்கி வைத்துக் கொண்டு அரசு கொள்முதல் செய்யவில்லை என்கின்றனர்.

ஒட்டு மொத்த விவசாயிகளும் ஒரே நேரத்தில் நெல்லைக் கொண்டு வந்தால் எப்படி கொள்முதல் செய்ய முடியும். மேலும் எடை, ரசீது போன்ற பிரச்னைகளுக்கு விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்பேன் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## கோடை வெயிலுக்கு உதிரும் மா பிஞ்சுகள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 10,2012,05:08 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு, 2 சதவீத மா மரங்களில் மட்டுமே முன்பருவ ரகமான செந்தூரா மற்றும் தோத்தாரபுரி ரக காய்கள் விளைந்துள்ளது. கோடை மழை பொய்து போன காரணத்தால் மா பிஞ்சுகள் வெயிலுக்கு வெதும்பி மரங்களில் இருந்து கீழே விழுவதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 41,000 ஹெக்டேரில் மா சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு நிலவும் சீதோஷ்ன நிலை மா சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மா வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதோடு, மாவட்டத்தில் செயல்பட்டு வரும், 40க்கும் மேற்பட்ட மாங்கூழ் தொழிற்சாலையில் அரைக்கப்பட்டு மாங்கூழ் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் மூலம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டுதோறும் அன்னிய செலாவணியாக கிடைக்கிறது.
ஜனவரி மாதம் மா மரங்களில் பூக்கள் பூத்து பிஞ்சுகள் விட ஆரம்பிக்கும். தொடர்ந்து முன் பருவ ரகங்களான செந்தூரா, குதாதத் ஆகிய ரக மாங்காய்கள் மார்ச் மாதத்தில் அறுவடைக்கு வரும். மத்திய பருவ, ரகமான தோத்தாபுரி, பங்கனப்பள்ளி ஆகிய ரகங்கள் மே மாதத்தில் அறுவடைக்கு வரும்.எந்த ஆண்டும் இல்லாத வகையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த ஆண்டு சீதோஷ்ண நிலை மாற்றம் காரணமாக மா மரங்களில் பூக்கள் பூப்பது காலதாமதமானது. இதனால் மார்ச் துவக்கத்தில் தான் முன்பருவ ரக மா மரங்களில் பூக்கள் பூத்தது.மாவட்டத்தில், 2 சதவீத மரங்களில் மட்டுமே பூக்கள் பூத்து பிஞ்சுகள் விட ஆரம்பித்துள்ளது. மற்ற மா மரங்களில் பூக்கள் பூக்காமல் அதிக அளவில் துளிர்கள் விட்டுள்ளது. ஒன்றிரண்டு மரங்களில் பிஞ்சுகள் விட்டு காய்கள் பெருகும் நேரத்தில் தற்போது மா மரங்களுக்கு கோடை மழை அவசியமாக உள்ளது.இந்தாண்டு கிருஷ்ணகிரி மாவட்டடத்தில் கோடை மழையும் பொய்த்து போன நிலையில் தற்போது, முன்பருவ ரகங்களான செந்தூரா, குதாதத் ஆகிய ரக மாரங்களிலும், மத்திய பருவ ரகமான தோத்தாபுரி ரக மா மரங்களிலும் பிஞ்சுகள் வெதும்பி கீழே விழுந்து வருகிறது.

ஏற்கெனவே விளைச்சல் குறைந்துள்ள நிலையில் விளைந்துள்ள ஒரு சில மரங்களில் இருந்து பிஞ்சுகள் வெதும்பி கீழே விழுவதால் மா விவசாயிகள் மற்றும் மா குத்தகை வியாபாரிகள் கலக்கத்தில் உள்ளது. ஜெகதேவியை சேர்ந்த மா குத்தகை வியாபாரி சரவணன் கூறியது:ஒரு

வருட அறுவடைக்கு இரண்டு ஏக்கர் சேர்த்து ஒரு லட்ச ரூபாய்க்கு மாந்தோப்புகளை குத்தகை எடுத்தோம். அதிக விளைச்சல் இருக்கும் எதிர்பார்த்து பணத்தை போட்டு மா மரங்களுக்கு மருந்தடித்தோம். ஆனால் மா மரங்களில் பூக்கள் பூக்கவில்லை.
முன்பருவ ரகங்களில் மட்டும் ஒரு சில மரங்களில் பூக்கள் பூத்து பிஞ்சுகள் விட ஆரம்பித்தது. அந்த பிஞ்சுகளும் தற்போது கோடை மழை இல்லாத காரணத்தால் வெதும்பி கீழே விழுகிறது. கிடைத்த வரைக்கும் லாபம் என்ற நோக்கத்தில் பிஞ்சுகளை சேகரித்து மார்க்கெட்டில் விலைக்கு விற்கிறோம். ஒரு கிலோ தோத்தாபுரி பிஞ்சு 40 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரை விற்பனையாகிது.இருக்கின்ற பிஞ்சுகள் எல்லாம் வெதும்பி கீழே விழுந்துவிட்டால் அறுவடை செய்ய காய்களே இருக்காது. இதனால் இந்த ஆண்டு மா குத்தகை வியாபாரிகள் மட்டுமன்றி மா விவசாயிகளுக்கும் பெருத்த நஷ்டம் ஏற்படும்.இவ்வாறு கூறினார்.

## காய்கறி விலை இரு மடங்கு உயர்வு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 10,2012,03:02 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல் : காய்கறிகளின் விலை இரண்டு மடங்கு உயர்ந்திருப்பதால், விற்பனை குறைந்துள்ளது.
திண்டுக்கல் காந்தி காய்கறி சந்தையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை நடக்கிறது. இங்குள்ள விலை நிர்ணயத்தை அடிப்படையாக கொண்டு தான், மற்ற சந்தைகளில் காய்கறி விற்பனை செய்யப்படும். தற்போது வரத்து குறைந்து, விலை உயர்ந்துள்ளது.
கடந்த வாரம் 16 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ முட்டைக் கோஸ், 40 ஆக உயர்ந்தது. "ஒரு கிலோவுக்கு அதிகமாக வாங்கினால் மட்டுமே முட்டைக்கோஸ் விற்கப்படும்' என, விற்பனையாளர்கள் கூறியதால், கால் கிலோ, அரை கிலோவை எதிர்பார்த்து வந்த பெண்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.
கடந்த வாரம் ரூ. 35 க்கு விற்ற பீன்ஸ் ரூ.80 க்கும், அவரைக்காய் ரூ.20 லிருந்து ரூ.40 க்கும், கத்தரிக்காய் ரூ.16 ல் இருந்து ரூ.24 க்கும், வெண்டைக்காய் ரூ.20 ல் இருந்து ரூ.32 க்கும், நாட்டுத் தக்காளி ரூ.16 ல் இருந்து ரூ.24 க்கும், குண்டுத் தக்காளி ரூ.12 ல் இருந்து ரூ.20 க்கும், உருளைக் கிழங்கு ரூ.16ல் இருந்து ரூ.18 க்கும், கேரட் ரூ.20 ல் இருந்து ரூ.32 க்கும், பட்டர் பீன்ஸ் ரூ.65 ல் இருந்து ரூ.120 க்கும், சோயா பீன்ஸ் ரூ.50 லிருந்து ரூ.100 க்கும், காலி பிளவர் ரூ.5 லிருந்து ரூ.15 க்கும் விற்கப்பட்டன.
இந்த விலை உயர்வில் இருந்து மல்லித் தழை, புதினா போன்றவையும் தப்பவில்லை.
கடந்த வாரம் ரூ.5 க்கு விற்கப்பட்டவை, இவை ரூ.10 ஆக உயர்ந்தது. அனைத்து காய்கறிகளின்

விலைகளும் இரண்டு மடங்காக உயர்ந்தன.
விற்பனையாளர் செந்தில் கூறுகையில், ""மின் தடையால், மின் "பம்ப்' இயக்க முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.
தண்ணீர் இல்லாததால் பயிர்கள் காய்ந்து கிடக்கின்றன. காய்கறி வரத்து பெருமளவில் குறைந்து விட்டது." என்றார்.

**உருளைக் கிழங்கு விவசாயிகளுக்கு தலைவலி : துவம்சம் செய்யும் முட்டை நூற்புழுக்கள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 10,2012,03:08 IST

கொடைக்கானல் : இருபது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து, உருளை கிழங்குகளை துவம்சம் செய்யும் முட்டை நூற்புழுக்களால், விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். இவற்றை கட்டுப்படுத்த வழி தெரியாமல், தோட்டக்கலை அதிகாரிகளும் பரிதவிக்கின்றனர்.
கொடைக்கானலில் 10 ஆயிரம் எக்டேரில் கேரட் உள்ளிட்ட காய்கறிகள் சாகுபடி நடக்கிறது. கூடுதல் வருமானம், குறைந்த நாள் மகசூல் கிடைக்கும், உருளைக் கிழங்கிற்கு மட்டும் சந்தையில் எப்போதும் கிராக்கி உண்டு. சில ஆண்டுகளாக, உருளைக் கிழங்கு விவசாயம் சரிவடைந்து வருகிறது.
காரணம்: உருளைக் கிழங்குகள் பயிரிட்டவுடன் ஒட்டுண்ணியாக முட்டை கூடு நூற்புழுவும் வந்து விடும். செடியில் இருந்து உருவாகும் வேதிப்பொருள் மூலம் முட்டை உடைந்து, ஒரு முட்டையில் இருந்து 20 புழுக்கள் வரை உருவாகும். மண்ணில் இருந்து செடிக்கு செல்லும் சத்துக்களை உறிஞ்சி, வளரவிடாமல் இவை தடுக்கின்றன. இதனால் மூன்றில் ஒரு பங்கு விளைச்சல் பாதிக்கும்.
இதனால் உருளை விவசாயிகள் செய்வதறியாது கண்ணீர் வடிக்கின்றனர். உருளை விவசாயத்தையே விட்டு விடலாமா? என்ற மன நிலைக்கு விவசாயிகள் மாறி வருகின்றனர்.
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் வெற்றிவேல் காளை கூறுகையில்,""இப்புழு 20 ஆண்டுகள் வரை வாழும். ஒரு முறை உருளை விவசாயத்திற்கு பின், மாற்றுப்பயிர் செய்து மீண்டும் பயிரிட்டாலும் கிழங்குகளை தாக்கும். இதை கட்டுப்படுத்த "சூடோமோனாஸ்' பாக்டீரியாவை, உரங்களில் கலந்து தெளிக்க ஆலோசனை வழங்குகிறோம்," என்றார்.

## தேனியில் இளநீர் விலை அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 10,2012,03:13 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி : மாவட்டம் முழுவதும் இளநீர் விளைச்சல் நன்றாக உள்ளது. இங்கிருந்து மதுரை, திருப்பூர், திண்டுக்கல் உட்பட வெளிமாவட்டங்களுக்கு இளநீர் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் மாவட்டத்தில் பற்றாக்குறை ஏற்பட்டு விலை உயர்ந்துள்ளது.

100 மி.லி., தண்ணீர் உள்ள சிறிய இளநீர் 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது. 200 முதல் 250 மி.லி., தண்ணீர் உள்ள இளநீர் 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

வெயில் அதிகரித்துள்ள நிலையில், இந்த விலை உயர்வு பொதுமக்களை பாதித்துள்ளது.

---

தினகரன்

## பவானிசாகர் அணை நீர்மட்டம் சரிவு

பதிவு செய்த நேரம்:2012-04-10 10:02:59

ஈரோடு: பவானிசாகர் அணை நீர்மட்டம் மளமளவென சரிந்து வருகிறது. தற்போது 5 டிஎம்சி மட்டுமே நீர்இருப்பு உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தின் பாசன மற்றும் குடிநீர் ஆதாரமாக பவானிசாகர் அணை உள்ளது. 120 அடி உயரமுள்ள அணையில் 105 அடி வரை தண்ணீர் சேமிக்கப்படுகிறது. 32 டிஎம்சி நீரை சேமிக்க இயலும். ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை காலங்களில் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மற்றும் கேரளா மாநிலத்தில் பெய்யும் மழையின் நீர்வரத்தே அணையின் முக்கிய நீராதாரமாக விளங்குகிறது.

தற்போது கோடையின் தாக்கத்தால் அணைக்கு நீர்வரத்து மிகவும் குறைந்து விட்டது. இந்நிலையில் குடிநீர் தேவைக்காகவும், கீழ்பவானி பாசனத்துக்காகவும் தொடர்ந்து தண்ணீர் வெளியேற்றப்படுவதால் நீர்மட்டம் கடுமையாக சரிவடைந்து வருகிறது. நேற்று மாலை அணையின் நீர்மட்டம் 54.65 அடியாக இருந்தது. அணைக்கு 350 கனஅடி நீர்வரத்து மட்டுமே இருந்தது. குடிநீர் தேவைக்காக 500 கனஅடியும், கீழ்பவானி பாசனத்துக்கு 2300 கனஅடியும் திறக்கப்பட்டது.

இதனால் அணையின் நீர்மட்டம் 5.7 டி.எம்.சி.யாக குறைந்தது.

வரும் 30ம் தேதியுடன் கீழ்பவானி பாசனத்துக்கு தண்ணீர் முற்றிலுமாக நிறுத்தப்பட்டு விடும். அதன் பிறகு காலிங்கராயன் மற்றும் தடப்பள்ளி- அரக்கன்கோட்டை பாசனத்துக்கு ஜூன் மாதத்திலும், கீழ்பவானி பாசனத்துக்கு ஆகஸ்ட் 15ம் தேதி தான் தண்ணீர் திறக்க வேண்டும். அதற்குள் தென்மேற்கு பருவமழை சீசன் துவங்கி நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதாக பொதுப்பணித்துறையினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

அணையின் நீர்மட்டம் 54 அடியாக குறைந்திருப்பது விவசாயிகளிடம் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

**எலுமிச்சை மரங்களை தாக்கும் நோயை கட்டுப்படுத்த யோசனை**

பதிவு செய்த நேரம்:2012-04-09 12:48:20

சின்னமனூர்: விளைநிலங்களில் பயிரிடப்பட்டுள்ள, எலுமிச்சை மரங் களை தாக்கும் சொறி நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

விளைநிலங்களில் எலுமிச்சை மரங்களை தாக்கும் நோய்களில் மிகவும் முக்கியமானது சொறி நோய். எலுமிச்சை பயிரிடப்படும் அனைத்து பகுதிகளிலும் இந்நோய் பரவலாக காணப்படுகிறது. இது ஒருவித பாக்டீரியாவினால் ஏற்படுகிறது.

நோயின் அறிகுறிகள்: இலை, கிளை, சிறு கிளை கள், முள், காய் மற்றும் பழங்களிலும் சொறிப்புள்ளிகள் தோன்றும். குச்சிகளில் தோன்றும் சொறிப்புள்ளிகளால், குச்சிகள் காய்ந்து விடும். காய்களில் தோன் றும் சொறிப் புள்ளிகளை சுற்றிலும் மஞ்சள் நிற வளையம் தோன் றும். பழங்களில் தோன்றும் சொறிப் புள்ளிகளில் வெடிப்புகள் தோன்றும். நோயினால் பழங்களின் தோல் பகுதி பாதிப்பிற்கு உள்ளாகின்றன. பழங்களில் சாறின் அளவும் குறைகிறது.

சொறி நோயுற்ற பழங்களின் சந்தை மதிப்பு வெகுவாக குறைகிறது. பழத்திலுள்ள சொறிப்புள்ளிகள் மற்றும் வெடிப்புகள் மற்ற அழுகல் நுண்ணு யிர்கள் உட்புக வழி உண்டாக்குகின்றன.

சொறி நோயினை ஏற்படுத்தும் பாக்டீரியா, இலைத்துளைகள் மூலமோ அல்லது பூச்சி அல்லது முட்களினால் ஏற்படும் காயங்கள் மூல மாக, உட்புகுந்து தாக்கு தலை துவங்குகின்றன. நோய் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்கு மழைத்துளிகள், காற்று மற்றும் இளைத்துளைக் கும் பூச்சிகள் மூலம் பரவுகிறது.

கட்டுப்படுத்தும் நுட்பங்கள்: நோயுற்று கீழே உதிர்ந்து கிடக்கும் இலைகள், சிறுகுச்சிகளை சேகரித்து எரித்துவிட வேண்டும். மரங்கள் நன்கு வளர நன்கு பரிந்துரைக்கப்பட்ட அளவு உரமிட்டு முறையாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

பழத்தோட்டங்களில் நோயுற்ற மரங்களிலிருந்து, நோயுற்ற சிறுகுச்சிகளை வெட்டிய பின்பு 0.25

சதவீதம் காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்து தெளிக்க வேண்டும்.

மரம் தளிர்விடும் ஒவ்வொரு சமயமும் மரத்தின் அனைத்து பகுதிகளுக்கும் நன்றாக நனையும்படி சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 0.2 சதவீத கரைசல், 2 லிட்டர் தண்ணீர் தெளிக்க வேண்டும். இவ்வகை பாக்டீரியா நோயை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் புளூரசன்ஸ் 0.2 சதவீத கரைசல், 2லிட்டர் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒரு முறை தெளிக்க வேண்டும். எலுமிச்சையில் தோன்றும் இலைத்துளைப்பான்கள் இந்நோயை பரப்புவதால் அவற்றை பூச்சிகொல்லி மருந்துகளை தெளித்து கட்டுப்படுத்துவது அவசியம்.

வேப்பம் புண்ணாக்கு 5 சதவீதம் கரைசலை தெளித்து இந்நோயினையும், நோய் பரப்பும் பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம்.

## தர்ப்பூசணி வரத்து சரிவு விலை கிடுகிடு உயர்வு

பதிவு செய்த நேரம்:2012-04-09 12:49:21

கம்பம்:கம்பம் பகுதியில் தர்ப்பூசணி வரத்து குறைந்ததால், விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. தேனி மாவட்டத்தில் சுட்டெரிக்கும் கோடை வெயில் சில நாட்களாக அதிகரித்துவிட்டது. ஆறுகள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. கோடை சீசனுக்கான திராட்சை, தர்ப்பூசணி, இளநீர், வெள்ளரி மற்றும் குளிர்பானங்கள் விற்பனை சூடுபிடித்துள்ளது.

திண்டிவனம், தஞ்சாவூர், ஜெயங்கொண்டம், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தினமும் 50 டன்கள் தர்ப்பூசணி கம்பம் பகுதிக்கு கடந்த வாரம் வரை கொண்டு வரப்பட்டன. இந்த வாரம் 25 டன் அளவிற்கு மட்டுமே தர்ப்பூசணி வரத்து உள்ளது. கம்பம் பகுதி மட்டுமின்றி, கேரளாவிற்கும் தர்ப்பூசணி அனுப்பப்படுகிறது. வரத்து குறைவால், விலை உயரத்துவங்கியுள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ தர்ப்பூசணி ரூ.10க்கு விற்கப்பட்டது. ஆனால், சில நாட்களாக கிலோ ரூ.15க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து சில்லரை வியாபாரிகள் சிலர் கூறுகையில், ''கம்பம் பகுதியை பொறுத்தவரையில் 200க்கும் மேற்பட்ட சில்லரை வியாபாரிகள் உள்ளனர். சராசரியாக ஒரு சில்லரை விற்பனை கடையில் 50 கிலோ விற்பனையாகிறது. திண்டிவனம், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து குறைந்தளவே தர்ப்பூசணி வரத்து உள்ளது. இதன்காரணமாக, கிலோவிற்கு ரூ.5 உயர்ந்துள்ளது. மே மாதத்தில் இன்னும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது,''என்றனர்.

**கடும் மின்வெட்டால் விவசாயம் பாதித்து உணவு உற்பத்தி குறையும் அபாயம் தமிழக விவசாயிகள் சங்கம் எச்சரிக்கை**

பதிவு செய்த நேரம்:2012-04-09 10:37:17

கிருஷ்ணகிரி: தமிழகத்தில் கடும் மின்வெட்டால் விவசாயம் பாதித்து, உணவு உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தமிழக விவசாயிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம் கொரல்தொட்டியில் கொடியேற்று விழா மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாநில பொதுச்செயலாளர் ராம கவுண்டர் தலைமை தாங்கி கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார். மத்திய மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் வரவேற்றார்.
மாவட்ட இளைஞர் அணி செயலாளர் சத்தியமூர்த்தி, கிளை நிர்வாகிகள் குப்பையன், கோவிந்தன்உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மத்திய மாவட்ட தலைவர் வேலு, மேற்கு மாவட்ட பொருளாளர் சுப்பிரமணி, துணைத் தலைவர் கோணப் பன், மத்திய மாவட்ட துணைத் தலைவர் பெரு மாள், கிருஷ்ணன், மத்திய மாவட்ட பொருளாளர் அசோக்குமார், மாவட்ட செயலாளர் வெங்கடேசன், துணைச் செயயாளர் மாணிக்கம் உள்பட விவசாயிகள் கலந்து கொண்டனர்.
கொரல்தொட்டி கிராமத்திற்கு குடிநீர் வசதி, மேல்நிலைத்தொட்டி இருந்தும் செயல்படாத நிலையில் உள்ளதை உடனடியாக சரி செய்ய வேண்டும். பகலில் 6 மணி நேரம், இரவில் 2 மணி நேரம் மொத்தம் 8 மணி நேரம் மின்வெட்டு என்று அறிவித்திருந்தாலும் இரவிலும், பகலிலும், மேலும் 1 மணி நேரம் மின்சாரம் வருவது இல்லை. மின்சார வினியோகத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். மின்வெட்டால் விவசாயம் மிகவும் பாதிப்பு அடையும் அதனால் உணவு உற்பத்தி குறையும் ஆகவே சீரான மின்சாரம் வழங்க வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் யானையின் தாக்குதலால் பல விவசாயிகள் பலியாகி உள்ளார்கள். இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ஞ10 லட்சம் இழப்பீடு தொகையை உடனடியாக வழங்க வேண்டும். பயிர் சேதத்திற்கு ஏக்கருக்கு ஞ30 ஆயிரம் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், ராயக்கோட்டையில் நடைபெறும் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைத்து விவசாயிகளும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. கிளை செயலாளர் சாந்தமூர்த்தி நன்றி கூறினார்.

## நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி 43% அதிகரிப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டின் முதல் பத்து மாதங்களில் (ஏப்ரல் – ஜனவரி) சமையல் எண்ணெய், பருப்பு வகைகள், மோட்டார் வாகனங்கள், பால், உணவு தானியங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி ரூ.83,714 கோடியாக உயர்ந்துள்ளது. இது, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ரூ.58,697 கோடியாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது இறக்குமதி 42.6 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த புள்ளி விவரங்களை மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

சமையல் எண்ணெய்

இந்தியா தனது சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் 50 சதவீதத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. சமையல் எண்ணெயை அதிக அளவில் இறக்குமதி செய்வதில் உலக அளவில் நம் நாடு முதலிடத்தில் உள்ளது. பயன்பாட்டிலும் முன்னிலை வகித்து வரும் நாடுகளில் ஒன்றாக நம் நாடு உள்ளது.

முதல் பத்து மாதங்களில் சமையல் எண்ணெய் இறக்குமதி 57.4 சதவீதம் அதிகரித்து ரூ.23,975 கோடியிலிருந்து ரூ.37,742 கோடியாக உயர்ந்துள்ளது. கச்சா பாமாயில் இறக்குமதி அதிகரித்ததையடுத்து, ஒட்டுமொத்தத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி உயர்ந்துள்ளது என மத்திய வர்த்தக அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொருள்களின் மொத்த இறக்குமதியில் சமையல் எண்ணெயின் பங்கு 46

*சதவீதமாக உள்ளது. உணவு பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளை இந்தியா அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது.*

*பழங்கள் மற்றும் காய்கறி இறக்குமதி வியக்கத்தக்க வகையில் 85.6 சதவீதம் அதிகரித்து ரூ.4,273 கோடியிலிருந்து ரூ.7,932 கோடியாக உயர்ந்துள்ளது. தனிநபர் ஆண்டு வருமானம் அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டு வருவதால், பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான தேவைப்பாடு அதிகரித்து வருகிறது.*

*மோட்டார் வாகனங்கள் இறக்குமதி 61.5 சதவீதம் அதிகரித்து ரூ.1,931 கோடியிலிருந்து ரூ.3,120 கோடியாக உயர்ந்துள்ளது.*

*குடை, பூட்டு*

*குடைகள், பூட்டுகள், பொம்மைகள், கண்ணாடி சாமான்கள் உள்ளிட்ட சிறுதொழில் நிறுவன தயாரிப்புகள் இறக்குமதி 45.8 சதவீதம் அதிகரித்து ரூ.1,255 கோடியிலிருந்து ரூ.1,830 கோடியாக உயர்ந்துள்ளது. ஆல்கஹால் கலந்த பானங்கள் இறக்குமதி 56.5 சதவீதமும், நறுமண பொருள்கள் இறக்குமதி 59.4 சதவீதமும் அதிகரித்துள்ளது.*

*அதேசமயம், உணவு தானியங்கள் இறக்குமதி 93.5 சதவீதம் குறைந்துள்ளது. பால், பால் பொருள்கள் இறக்குமதி 20 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*மொத்த இறக்குமதி*

*முதல் பத்து மாதங்களில் அனைத்து வகை பொருள்களின் மொத்த இறக்குமதி சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 30 சதவீதம் அதிகரித்து ரூ.19,57,500 கோடியாக உயர்ந்துள்ளது. மொத்த இறக்குமதியில் அத்தியாவசிய பொருள்களின் பங்கு 4.3 சதவீதமாக உள்ளது.*

*இந்தோனேஷியா, சீனா, மலேசியா, அர்ஜென்டினா, ஜெர்மனி, கொரியா, அமெரிக்கா, கனடா, ஜப்பான், தாய்லாந்து, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து அத்தியாவசிய பொருள்கள் இறக்குமதி அதிகரித்துள்ள நிலையில், பிரேசில் நாட்டிலிருந்து இறக்குமதி குறைந்துள்ளது.*

*பொருள் குவிப்பு வரி*

*உள்நாட்டில் உணவு பொருள்கள் விலை மிகவும் அதிகரிக்கும் நிலையில், அத்தியாவசிய பொருள்கள் மீதான இறக்குமதி தீர்வையை மத்திய அரசு குறைக்கும். எனினும், இந்த இறக்குமதியால் உள்நாட்டு நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறதா என்பதை மத்திய அரசு கண்காணிக்கிறது. பாதிப்பு ஏற்படும் நிலையில், பொருள் குவிப்பு வரி, உள்நாட்டு வர்த்தக வரி போன்றவை விதிக்கப்படுகின்றன.*

*சென்ற ஜனவரி மாதத்தில் நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் 7.65 சதவீதமாக இருந்தது. இந்த பணவீக்கம் சென்ற பிப்ரவரி மாதத்திலிருந்து மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. இந்த குறியீட்டு எண் கொண்டு தயாரிக்கப்படும் பணவீக்கத்தால் பொருள்கள் விலையை துல்லியமாக கணக்கிட முடியும் என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில்*

*கணக்கிடப்படும் பணவீக்கம் ஜனவரி மாதத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.55 சதவீதமாக குறைந்தது.*

## ***சென்ற நிதியாண்டில் காபி ஏற்றுமதி 17 சதவீதம் உயர்வு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*கொச்சி*
*சென்ற 2011–12–ஆம் நிதியாண்டில் இந்தியாவின் காபி ஏற்றுமதி எதிர்பார்ப்புகளை விஞ்சி 17 சதவீதம் உயர்ந்து 3.48 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளதாக முதல் கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.*
*ஐரோப்பிய நாடுகளையே பெரிதும் சார்ந்துள்ள இந்திய காபி ஏற்றுமதி அந்நாடுகளில் நிலவி வந்த பொருளாதார சிக்கல்கள் காரணமாக 10 முதல் 15 சதவீதம் வரை சரிவடையலாம் என எதிர்பார்க்கப்பட்டது.*
*மேலும், சர்வதேச சந்தையில் காபியின் விலையில் ஏற்பட்ட சரிவும், ஏற்றுமதிக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைகள் விலக்கி கொள்ளப்பட்டதும் காபி ஏற்றுமதியில் பின்னடைவினை ஏற்படுத்தும் என்ற அச்சப்பாட்டை ஏற்படுத்தியது.*
*இந்நிலையில், கடந்த 2011–12 ஆம் நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஏற்றுமதி வரலாறு காணாத அளவில் உயர்ந்துள்ளது.*
*அமெரிக்க டாலருக்கெதிரான இந்திய ரூபாயின் மதிப்பில் ஏற்பட்ட சரிவும் ஏற்றுமதி மதிப்பினடிப்படையில் அதிகரித்ததற்கு முக்கியமான காரணமாகும்.*
*2010–11 நிதியாண்டில் ஏற்றுமதியான 2.97 லட்சம் டன் காபியே இது வரையிலும் அதிகமான அளவாக இருந்து வந்தது. இந்நிலையில், அராபிக்கா மற்றும் ரோபஸ்டா ஆகிய இரண்டு ரகங்களின் உற்பத்தி சிறப்பாக அதிகரித்துள்ளது.*

## ***மகசூல் குறைவாக உள்ள போதிலும் தேயிலை விலை வீழ்ச்சி ஏற்படுவதால் விவசாயிகள் கவலை***

*குன்னூர், ஏப்.10–*
*தேயிலை மகசூல் குறை வாக உள்ள போதிலும் தேயிலை விலை வீழ்ச்சி அடைவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.*
*சிறு விவசாயிகள்*
*நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலான சிறு விவசாயி கள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு*

வருகின்றனர். சிறு விவசாயிகளால் சிறு தேயிலை தொழிற் சாலைகளுக்கு வழங்கப்படும் பச்சை தேயிலைக்கு வார விலை, மாத விலை என்று இரு விலைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

தேயிலை தர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேயிலை வாரியம் பச்சை தேயிலையை ஏ பிரிவு, பி பிளஸ் பிரிவு, சாதாரண பிரிவு என 3 வகைகளாக பிரித்து அதன் படி சிறு விவசாயிகளுக்கு பச்சை தேயிலைக்கான விலை வழங்கப்பட்டு வருகிறது.

சிவப்பு சிலந்தி தாக்குதல்

தற்போது மழை இல்லாமல் வறட்சியான கால நிலை நிலவி வருகிறது. இந்த வறட்சியின் காரணமாக பெரும்பாலான தேயிலை தோட்டங்களில் சிவப்பு சிலந்தியின் தாக்குதல் உள்ளது. இதனால் தேயிலை மகசூல் குறைவடைந்து உள்ளது.

பச்சை தேயிலை மகசூல் குறைவடைந்ததால் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூளின் அளவும் குறைந்து உள் ளது. இந்த நிலையில் விற்பனை எண் 14–க்கான ஏலம் குன்னூரில் நடைபெற்றது.

ரூ.2 விலை வீழ்ச்சி

ஏலத்திற்கு 9 லட்சத்து 63 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இந்த தேயிலை தூளின் அளவு இதுவரை நடைபெற்ற 13 ஏலங்களில் குறைவான வரத்து ஆகும். இருப்பினும் ஏலத்தில் தேயிலை தூளுக்கு தேவை அதிகம் இல்லாமல் ரூ.2 விலை வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது.

பச்சை தேயிலை விலையில் மாறுதல் இல்லாமல் 12 ரூபாய் என்றும், 16 ரூபாய் என்றும், 20 ரூபாய் என்றும் விலை வழங்கப்பட்டு உள்ளது. தேயிலை மகசூல் குறைவாக இருப்பதால் சாதாரண வகை பச்சை தேயிலைக்கு வழங்கப் படும் விலை குறைவாகவே இருப்பதாக சிறு விவசாயிகள் கூறி வருகின்றனர். விலை வீழ்ச்சி ஏற்படுவதால் விவசாயி கள் கவலை அடைந்துள்ள னர்.

எனவே வரத்து குறைவாக உள்ள இந்த காலத்தில் தேயி லைக்கு விலை அதிகம் ஏற்பட அரசு ஆவன செய்ய முன்வர வேண்டும் என்ற கோரிக்கை சிறு விவசாயிகள் மத்தியில் உள்ளது.

## கோவை மாவட்டத்தில் 6 ஆயிரம் ஏக்கர் தென்னை விவசாயம் பாதிப்பு தண்ணீர் இருந்தும், மின்சாரம் இல்லையே என விவசாயிகள் கவலை

கோவை,ஏப்.10–

கோவை மாவட்டத்தில் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள தென்னை மரங்கள் போதிய தண்ணீர் இல்லாமல் பாதிக்கும் நிலையில் உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

தென்னை மரங்கள் சாகுடி

கோவை மாவட்டத்தில் சுல்தான் பேட்டை, மதுக்கரை, தொண்டா முத்தூர், பொள்ளாச்சி அன்னூர், அவினாசி, மேட்டுப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 6 ஆயிரம்

ஏக்கர் பரப்பளவில் தென்னைமரங்கள் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இது தவிர சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் வாழை மரங்களும் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன.

தென்னை விவசாயத்தை பொறுத்தவரை ஒரு நீண்டகால பயிர் ஆகும். ஆண்டுக்கு 3 முறை பலன் கொடுக்கிறது. இந்த நிலையில் தென்னை மரத்துக்கு தினசரி போதிய தண்ணீர் வேண்டும். குறைந்தபட்சம் ஒருநாள் விட்டு ஒருநாள் என்று பார்த்தாலும் ஒரு மரத்துக்கு 40 லிட்டர் தண்ணீர் விட வேண்டும். ஆனால் தற்போது பருவமழை இல்லாமலும், இருக்கிற தண்ணீரை இறைத்து ஊற்ற மின்சாரம் இல்லாததாலும் தென்னை மரங்கள் சாகுபடி செய்த விவசாயிகள் கவலை இடைந்து உள்ளனர். இது குறித்து கோவை மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் வழுக்குப்பாறை பாலு கூறியதாவது:–

மின்தடை

கோவை மாட்டத்தில் தென்னை, வாழை விவசாயத்தை நம்பி சுமார் 30 ஆயிரம் விவசாயிகள் உள்ளனர். விவசாயத்துக்கு பகலில் 6 மணிநேரம், இரவில் 6 மணிநேரம் என்று வழங்கப்பட்ட மின்சாரம் தற்போது மொத்தத்தில் 3 மணிநேரம் என்ற நிலையில் தான் வழங்கப்படுகிறது. இதனால் தென்னை மரங்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை அதிகரித்து உள்ளது. விவசாய கிணறுகளில் தண்ணீர் அதிகமாக இருந்தும், அதை பயன்படுத்துவதற்கு தேவையான மின்சப்ளை இல்லை. மின்சாரம் தற்போது 3 மணிநேரம் தான் கிடைக்கிறது. இதை வைத்து மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. சொட்டு நீர்பாசன முறையில்தான் தண்ணீர் விடப்படுகிறது. அதுவும் ஒருநாள் விட்டு ஒருநாள் என்ற நிலையில் தான் உள்ளது.

கண்ணீர் வடிக்கும் நிலை

அவ்வாறு கொடுக்க கூடிய தண்ணீரும் சில வேளைகளில் மின்தடையால் பாதிக்கப்படுகிறது. இதனால் தென்னை மரங்கள் பாதிப்படைந்து வருகின்றன. மரங்களின் உட்பகுதியில் உள்ள சோற்றுப்பகுதி, நீர்ப்பகுதிகள் வறண்டுபோய் காணப்படுகின்றன. தற்போது கடும் வெயில் அடிப்பதாலும் தென்னை ஓலைகள் தனது பச்சையத்தை இழந்து பழுப்படிக்க தொடங்கி விட்டன. இப்படியே போனால், மீண்டும் தென்னை மரங்களை பழைய நிலைக்கு கொண்டுவர 3 ஆண்டுக்கு மேல் ஆகலாம். மேலும் பருவமழை தற்போது அடியோடு நின்று போய் கிடக்கிறது. இதனால் தென்னை விவசாயிகள் கண்ணீர் வடிக்கும் நிலையில் காணப்படுகின்றோம்.

இது தவிர வாழை பயிரிட்ட விவசாயிகளும் வாழை மரங்களில் மகசூல் கிடைக்குமா? என்ற கவலையில் உள்ளனர். பொதுவாக தென்னை, வாழைக்கு தடையில்லாமல் தண்ணீர் கிடைத்தால் தான் பெருத்த நஷ்டத்தில் இருந்து விடுபட முடியும். ஆகவே விவசாயத்துக்கு இலவச மின்சாரம் தினசரி 6 மணிநேரம் தடையில்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.